Puducherry Regional Bulletin Tamil

29.01.2025 18.10 Hrs.

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 29.01.2025 - புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

டெல்லியில் ஏழைகளுக்கு வீடும், வீடுகளுக்கு குடிநீர் இணைப்பும் வழங்கி நவீன டெல்லி ஒன்றை உருவாக்கும் அரசையே மக்கள் விரும்புவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரயாக்ராஜில் நடைபெறும் மஹா கும்பமேளாவில், இன்று மவுனி அமாவாசை தினத்தை ஒட்டி, கோடிக் கணக்கிலான பக்தர்கள், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர்.

முக்கியக் கனிமங்களின் விநியோகச் சங்கிலியில், நெகிழ்வுத் தன்மையை மேம்படுத்த, தேசிய இயக்கம் ஒன்றை அமல்படுத்தும் உத்தேசத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரியில், நாளை நடைபெற உள்ள, தேசிய சாலைப் பாதுகாப்பு மாதத்தின் நிறைவு விழாவில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

*மோடி டெல்லி (12)*

டெல்லியில் ஏழைகளுக்கு வீடும், வீடுகளுக்கு குடிநீர் இணைப்பும் வழங்கி நவீன டெல்லி ஒன்றை உருவாக்கும் அரசையே மக்கள் விரும்புவதாக பிரதமர்

திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று வடகிழக்கு டெல்லி தொகுதியில், டெல்லி சட்டமன்றத் தேர்தலுக்கான பாரதிய ஜனதா கட்சியின் பிரச்சார பொதுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். கடந்த 25 ஆண்டுகளாக காங்கிரஸ் மற்றும் ஆம் ஆத்மி ஆட்சிகளில், டெல்லியின் பிரச்சனைகள் அப்படியே நீடிப்பதாகவும், நடப்பு ஆம் ஆத்மி அரசின் பொய்களும், கொள்ளையும் இனி தொடர முடியாது என்றும் பிரதமர் குறிப்பிட்டார். டெல்லியில் பிஜேபி பதவிக்கு வந்தவுடன் மக்களுக்கு வழங்கிய எல்லா வாக்குறுதிகளும், காலக்கெடு அடிப்படையில் நிறைவேற்றப் படும் என்றும், இதை மோடியின் உத்தரவாதமாக மக்களுக்கு தாம் வழங்குவதாகவும், அவர் கூறினார்.

*மோடி டெல்லி-சேர்க்கை (14)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசும் முன்பாக, பிரயாக்ராஜ் மஹா கும்பமேளாவில் நிகழ்ந்த துயர கரமான விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்தார். சம்பவத்தில் பலருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாகவும், நிலவரங்கள் குறித்து உத்தரப்பிரதேச அரசை தொடர்ச்சியான முறையில் தாம் தொடர்பு கொண்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார். சம்பவம் குறித்து துயரம் வெளியிட்டு, பிரதமர் சமூக ஊடகத்திலும் பதிவு வெளியிட்டுள்ளார். குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்டவர்களும் சம்பவம் குறித்து, துயரம் வெளியிட்டுள்ளனர்.

பிரதமரும், மத்திய உள்துறை அமைச்சர் உள்ளிட்ட தலைவர்களும் சம்பவம் குறித்து தம்மை தொடர்பு கொண்டு பேசியதாக, உத்தரப்பிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்ய நாத் தெரிவித்தார். மஹா கும்பமேளாவில் பல கோடி மக்கள் கூடியிருப்பதால், மக்கள் தங்களுக்கு அருகாமையில் உள்ள படித் துறைகளில் நீராட வேண்டும் என்றும், வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும், அவர் கேட்டுக் கொண்டார்.

*அமிர்த ஸ்நானம் -1(4)*

உத்தரப்பிரதேஷ் மாநிலம், பிரயாக்ராஜில் நடைபெறும் மஹா கும்பமேளாவில், முக்கிய நாட்களில் ஒன்றான மவுனி அமாவாசை தினத்தை ஒட்டி, இன்று கோடிக் கணக்கிலான பக்தர்கள், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்...

(வாய்ஸ்)

*அமிர்த ஸ்நானம் -2(14)*

(வாய்ஸ்)

மஹா கும்பமேளாவில், இன்று பிற்பகல் வரை 4 கோடிக்கும் மேற்பட்டவர்கள், புனித நீராடியதாகவும், மேலும், இலட்சக் கணக்கிலான பக்தர்கள், திரிவேணி சங்கமத்திற்கு வந்து கொண்டு இருப்பதாகவும், தகவல் வெளியாகி உள்ளது. உலகின் மாபெரும் மகத் திருவிழாவாக அங்கீகரிக்கப் பட்டுள்ள, மஹா கும்பமேளா கடந்த ஜனவரி 13ஆம் தேதி, தொடங்கியது முதல், இதுவரை, 24 கோடிக்கும் மேற்பட்டவர்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி உள்ளனர்.

மவுனி அமாவாசை தினத்தை ஒட்டி, உத்தரப்பிரதேஷ் அரசு கும்பமேளா பகுதியில், பாதுகாப்பு ஏற்பாடுகளை கணிசமான அதிகரித்துள்ளது. 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலிசார் மற்றும் இணை ராணுவப் படையினர், பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் , விழாப் பகுதியில் நிறுவப் பட்டுள்ளன. திரிவேணி சங்கமத்தில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள, தற்போது முதல் முறையாக நீர்மூழ்கி ட்ரோன்கள் பயன்படுத்தப் படுவதும் குறிப்பிடத் தக்கது.

*கும்பமேளா ரயில்வே (8)*

பிரயாக்ராஜ் மஹா கும்பமேளாவிற்கான சிறப்பு ரயில்களில் சில ரயில்கள் ரத்து செய்யப் பட்டுள்ளதாக, சமூக ஊடகத்தில் உலா வரும் வதந்திகளை ரயில்வே துறை மறுத்துள்ளது. இத்தகைய தகவல்கள் முற்றிலும் ஆதாரமற்றவை என்று ரயில்வே வாரியத்தின் தகவல் – விளம்பரத் துறை செயல் இயக்குநர் திரு. திலீப் குமார், ஆகாஷ்வாணி நிருபரிடம் தெரிவித்தார். மவுனி அமாவாசை தினத்தை ஒட்டி, ரயில்வே துறை நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து, 370க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்களை கும்பமேளாவிற்கு இயக்குவதாக அவர் மேலும் கூறினார்.

*டெல்லி காங்கிரஸ் (13)*

டெல்லி சட்டமன்றத் தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை கட்சியின் மூத்த தலைவர்களான திரு. ஜெய்ராம் ரமேஷ், திரு. பவன் கேரா ஆகியோர் இன்று வெளியிட்டனர். டெல்லி பிரதேச காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. தேவேந்திர யாதவ் உடன் இருந்தார். பெண்களுக்கு மாதம் 2 ஆயிரத்து 500 ரூபாய் நிதி உதவி, வீடுகளுக்கு 300 யூனிட் வரை இலவச மின்சாரம், 500 ரூபாய் விலையில் எல்.பி.ஜி சிலிண்டர், 25 இலட்சம் ரூபாய் வரை இலவச மருத்துவ காப்பீடு உள்ளிட்ட வாக்குறுதிகள், டெல்லி சட்டமன்றத் தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. டெல்லியில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தவும், பூர்வாஞ்சல் மக்களுக்கு நலத் துறை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப் படும் என காங்கிரஸ் உறுதி அளித்துள்ளது. டெல்லி நகரின் காற்று மாசுபாட்டு பிரச்சனையை, பாரதிய ஜனதாவும், ஆம் ஆத்மி கட்சியும் புறக்கணிப்பதாக, தேர்தல் அறிக்கையை வெளியிட்டு பேசுகையில் திரு. ஜெய்ராம் ரமேஷ் குற்றம் சாட்டினார்.

*அமைச்சரவை முடிவுகள் -1(5)*

பசுமை தொழில் நுட்பங்களின் பயன்பாட்டிற்குத் தேவையான முக்கிய கனிமங்களின் விநியோகச் சங்கிலியில், நெகிழ்வுத் தன்மையை மேம்படுத்தும் வகையில், 34 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், தேசிய இயக்கம் ஒன்றை அமல்படுத்தும் உத்தேசத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அமைச்சரவையின் முடிவுகள் குறித்து கூடுதல் தகவல்கள்…

(வாய்ஸ்)

*அமைச்சரவை முடிவுகள் -2(14)*

(வாய்ஸ்)

மத்திய அமைச்சரவையின் முடிவுகளை மத்திய தகவல் – ஒலிபரப்பு அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் வெளியிட்டார். முக்கியக் கனிமங்கள் பற்றிய தேசிய இயக்கத்தினால், கனிமப் படிவுகள் அதிகம் உள்ள இடங்களை கண்டு பிடிக்கவும், இறக்குமதியை குறைக்கவும் ஏதுவாகும் என்று அவர் கூறினார். வேளாண்மை, போக்குவரத்து, பாதுகாப்பு, தொலைத் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு இத்தகைய கனிமங்கள் தேவைப்படுவதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

எத்தனால் தயாரிப்பில் பயன் படுத்துவதற்கான கரும்புச் சாறு, மற்றும் கழிவுப் பாகு ரகங்களுக்கு, அமைச்சரவைக் கூட்டத்தில் நிர்ணயிக்கப் பட்ட, கொள்முதல் விலை விவரங்களையும், அமைச்சர் வெளியிட்டார். பெட்ரோலுடன் எத்தனால் கலந்து விற்பதால், 1 லட்சத்து 13 ஆயிரம் கோடி ரூபாய் அன்னிய செலாவணி மிச்சமாகி இருப்பதாகவும், இந்த வகையில், கடந்த எத்தனால் விநியோக ஆண்டில் மட்டும், விவசாயிகளுக்கு சுமார் 40 கோடி ரூபாய் வழங்கப் பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

*வக்ஃபு (15)*

புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, வக்ஃபு திருத்த மசோதா குறித்த கூட்டு நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தில், குழுவின் வரைவு அறிக்கைக்கு, ஏற்பு அளிக்கப் பட்டது. மசோதாவின் 14 ஷரத்துகளில் திருத்தங்களை பரிந்துரைக்க, கூட்டு நாடாளுமன்ற குழுவின் கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டுள்ளதாகவும், வரைவு அறிக்கை நாளை மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லாவிடம் சமர்பிக்கப் படும் என்றும் குழுவின் தலைவர் திரு. ஜகதம்பிகா பால் தெரிவித்தார்.

இதற்கிடையே, கூட்டு நாடாளுமன்றக் குழுவின் எதிர்கட்சி உறுப்பினர்கள் வரைவு அறிக்கை குறித்து ஆட்சேபணை வெளியிட்டுள்ளனர். வரைவு அறிக்கை அவசரகதியில் ஏற்கப் பட்டதாக, திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆ. ராசா கூறினார். மசோதா பற்றிய தங்களின் பல கருத்துக்களும், ஆட்சேபணைகளும், அறிக்கையில் இடம் பெறவில்லை என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. நசீர் உசேன் கூறினார். வரைவு அறிக்கை குறித்து, அதிருப்திக் குறிப்புகளை தாங்கள் சமர்பித்து இருப்பதாக, திரிணாமுல் காங்கிரசை சேர்ந்த திரு. கல்யாண் பானர்ஜி உள்ளிட்ட எதிர்கட்சி எம்.பிக்கள் தெரிவித்தனர்.

*சாலை பாதுகாப்பு (14)*

புதுச்சேரியில், நாளை கம்பன் கலையரங்கில் நடைபெற உள்ள, 36ஆவது தேசிய சாலைப் பாதுகாப்பு மாதத்தின் நிறைவு விழாவில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், தலைமை விருந்தினராக கலந்து கொண்டு, சாலைப் பாதுகாப்பு குறித்த, உயர்நிலைப் பள்ளி அளவிலான அனிமேஷன் வீடியோக்களை, கல்வித் துறையிடம் வழங்குகிறார். முதலமைச்சர் திரு. ரங்கசாமி தலைமையில் நடைபெற உள்ள இவ்விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் திரு.ஆர். செல்வம், அமைச்சர்கள் திரு. நமச்சிவாயம், திரு. லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் திரு. அனிபால் கென்னடி, தலைமைச் செயலர் திரு. சரத் சௌகான், காவல்துறை தலைமை இயக்குநர் திருமதி.

ஷாலினி சிங், போக்குவரத்துத் துறைச் செயலர் டாக்டர் முத்தம்மா உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர். போக்குவரத்து விதிமுறை மீறல்களை தடுப்பதில் சிறப்பான முறையில் செயல்பட்ட தலைமை காவலர்களுக்கும், சாலை விபத்தில் சிக்கியவர்களின் உயிரை காப்பாற்றியவர்களுக்கும், விழாவின் போது, சான்றிதழ் மற்றும் ரொக்கப்பரிசு வழங்கப்படும் என, போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.

*செயற்கைக் கோள் (17)*

இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் NVS – 02 புதிய தலைமுறை செயற்கைக் கோள், ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி மையத்தில் இருந்து இன்று காலை, GSLV-F15 ராக்கெட் மூலம், வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டு, புவி வட்டப் பாதையில் நிலை நிறுத்தப் பட்டது. இதன் மூலம், ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து, இஸ்ரோவின் 100ஆவது ராக்கெட், விண்ணில் ஏவப்பட்டு சாதனை படைக்கப் பட்டுள்ளது. தரை, கடல், வான்வழிக் கலங்களுக்கு வழிகாட்டவும், பாதுகாப்புத் துறையின் செயல்பாடுகளுக்கும், உதவிகரமாக புதிய செயற்கைக் கோள் அமையும் என இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது. இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து, இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் , இன்று ஸ்ரீஹரிகோட்டாவில், செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்தியா அடுத்த 5 ஆண்டுகளில், மேலும் 100 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார். ககன்யான் திட்டத்திற்கான முன்னேற்பாடுகள், வேகமாக நடைபெற்று வருவதாகவும், சந்திரயான்-4 மற்றும் சந்திரயான்-5 திட்டங்கள், தீவிரமாக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். தூத்துக்குடி மாவட்டம், குலசேகர பட்டினத்தில், 2ஆவது ராக்கெட் ஏவுதளம் அமைக்கும் பணிகள், 2 ஆண்டுகளில், முடிவடையும் என்றும் இஸ்ரோ தலைவர் தெரிவித்தார்.

*கால் பந்து (5)*

இண்டியன் சூப்பர் லீக் கால் பந்து போட்டித் தொடரில், குவஹாத்தியில் இன்று மாலை நடைபெற உள்ள போட்டியில், ஒருங்கிணைந்த வடகிழக்கு புட்பால் கிளப் அணி, ஹைதராபாத் FC அணியுடன் மோத உள்ளது. தற்போது புள்ளிப் பட்டியலில், வடகிழக்கு அணி, 6ஆவது இடத்திலும், ஹைதராபாத் அணி, கடைசிக்கு முந்தைய இடத்திலும் உள்ளன.

*நக்சல் (6)*

ஜார்க்கண்ட் மாநிலம் மேற்கு சிங்பும் மாவட்டத்தில், இன்று பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது, நக்சலைட்டுகளுடன் ஏற்பட்ட மோதலில், 2 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் சில நக்சலைட்டுகள் காயமடைந்தனர். தேடுதல் பணிகளின்போது, 2 இன்சாஸ் ரகத் துப்பாக்கிகளும், கைப்பற்றப் பட்டதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

டெல்லியில் ஏழைகளுக்கு வீடும், வீடுகளுக்கு குடிநீர் இணைப்பும் வழங்கி நவீன டெல்லி ஒன்றை உருவாக்கும் அரசையே மக்கள் விரும்புவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரயாக்ராஜில் நடைபெறும் மஹா கும்பமேளாவில், இன்று மவுனி அமாவாசை தினத்தை ஒட்டி, கோடிக் கணக்கிலான பக்தர்கள், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர்.

முக்கியக் கனிமங்களின் விநியோகச் சங்கிலியில், நெகிழ்வுத் தன்மையை மேம்படுத்த, தேசிய இயக்கம் ஒன்றை அமல்படுத்தும் உத்தேசத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரியில், நாளை நடைபெற உள்ள, தேசிய சாலைப் பாதுகாப்பு மாதத்தின் நிறைவு விழாவில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / CN / RK